தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
23427.
சென்னை-600 008

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

25. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் படிவத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1–11–1989 ஆம் நாளிட்ட 785ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

26. சென்னை மாநகராட்சி எல்லைக்குள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள சில பகுதிகளில், 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயலுக்கு வரும் நாளினை அறிவிப்பது குறித்து வருவாய்த்துறையின் 23–6–1989ஆம் நாளிட்ட 849ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1966ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 45(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. 1965ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 31–8–1989ஆம் நாளிட்ட 1441ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1961ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

28. எம்.டி.இ. 6156ஆம் எண் கொண்ட இயக்கூர்திக்காக 1973ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் 1974ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடியவுள்ள கால அளவில் செலுத்தப்பட வேண்டிய வரி பாக்கி மற்றும் தண்டத் தீர்வையினை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 16–10–1989ஆம் நாளிட்ட 2183ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

29. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் சட்ட விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 20–12–1989ஆம் நாளிட்ட 2765 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.